அறநெறியண்ணல் நினைவு வெளியீடு

தமிழக சிவ வழிபாட்டின் அடிப்படைத் தத்துவம்



இயற்றியவர்

கி. பழநியப்பனார்

தோற்றம் : 20-11-1908 மறைவு : 26-02-1998

அறநெறியண்ணல் திரு. கி. பழனியப்பனார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

பிறப்பு	:	20-11-1908
இறப்பு	:	26-02-1998
பெற்றோர்	:	மு. கிருட்டிணப் பிள்ளை - உமைய பார்வதி
உரிமையாளர்	:	விவேகாநந்தா அச்சகம்
பெற்ற பட்டங்கள்	:	அறநெறியண்ணல் (மதுரைத் திருவள்ளுவர் கழகம்) திருவள்ளுவர் கழக விழாவில் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தலைமையில் குன்றக்குடி அடிகளார் வழங்கினார். சைவ சமய சேவாமணி (காஞ்சி காமகோடி பீடாதிபதி திருப்பெருந்திரு ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் வழங்கியது) தமிழ் மறைக் காவலர் (பவழ விழாக் குழுவினர் அளித்தது.) திருக்குறள் நெறித் தோன்றல் (திருக்குறள் நெறி பரப்பும் மையம் அளித்தது.) முப்பால் மூதறிஞர் (தமிழ் 'கா. சு' இலக்கியக் குழு, குளித்தலை அளித்தது.)
இதழாசிரியர்	:	விவேகாநந்தம் (மாத இதழ்) மதுரை மலர் (வார இதழ்)
எழுதிய நூல்கள்	:	வாழ்விக்க வந்தோர் வரலாறு கோவில் மாநகர் மதுரை மீனாட்சி பாண்டியன் மகளானது ஏன்? ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! வெற்றி கொடுக்கும் நல்வாழ்வுக்கு எதை - எப்படி - செய்வது பேசும் பிள்ளையார் திருக்குறள் சிந்தனை திருக்குறள் நெறி - வாழும் வழி குறளமுது பழமுதிர்சோலை அருள்மிகு ரெட்டியப்பட்டி ஆண்டவர் கலி வெண்பா மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி அருச்சனைக் கும்மி நலம் தரும் நாம மந்திரம் திருமுறைத் திருமணம் கீதா போதம் (குறள் வெண்பா), சிவஞான சித்தியார் விளக்கம்

சிவஞான போத விளக்கம்,
சிவ வழிபாடு.

தமிழ்த் தொண்டு :

நிறுவனர் : மதுரைத் திருவள்ளுவர் கழகம்

செயலர் : மதுரைத் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி

நடத்திய விழாக்கள்: 1. முத்தமிழ் மாநாடு (1942) 2. தமிழ்த் திருநாள் (1948)
3. தமிழ்ச் சங்கப் பொன்விழா (1956)
4. திருவள்ளுவர் கழக வெள்ளி விழா (1967)
பொன் விழா (1994)
5. திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழா (1970)

உறுப்பினர் : தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
தேர்வுக் குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம்
பேராளர் முதல் உலகத் தமிழ் மாநாடு (மலேசியா)
இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு (சென்னை)
நான்காம் உலகத் தமிழ் மாநாடு (மதுரை)
முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பொன்னாடை
போர்த்துதல், தாகூர் நூற்றாண்டுக் குழு உறுப்பினர்

சமூகத் தொண்டு : மதுரை சுழற் குழுச் செயலாளர்
மதுரை அரிமா சங்கம் - நிறுவன உறுப்பினர்
மதுரை நகர் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
மதுரை வட்டம் கூட்டுறவு நில அடமான
வங்கி - செயலர்

இறைத் தொண்டு : மீனாட்சி ஆலயத்தில் தமிழ் அர்ச்சனை
நடைபெற வழி வகுத்தார்.
மீனாட்சித் திருக்கோவில் குடமுழுக்கு விழா (1963)
பழமுதிர் சோலை முருகன் கோவில்
குடமுழுக்கு விழா (1960)
நமச்சிவாய ஒலிப் பேழை (திருப்பாம்புரம்
சண்முகசுந்தரம் பாடியது - மதுரைக் காமராசர்
பல்கலைக் கழகத் துணை வேந்தர்
டாக்டர் எம். இலட்சுமணன் அவர்கள்
தலைமையில் வெளியிடப்பட்டது)

ஓவியத் தொண்டு : தமிழறிஞர்கள் 60 பேர்களின் ஓவியங்களை
வரைந்து மலேசிய உலகத் தமிழ் மாநாட்டில்
கண்காட்சி - அமைச்சர் பக்தவத்சலம்
திறந்து வைத்தார்.
திருக்குறள் விளக்கப் படங்கள் கண்காட்சி -
(மதுரை) தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
டாக்டர் வ.அய். சுப்ரமணியம் திறந்து வைத்தார்

உ

தமிழக சிவ வழிபாட்டின் அடிப்படைத் தத்துவம்

(கி. பழநியப்பனார்)

சிவலிங்க வழிபாடு கி.மு. 3000 ஆண்டிற்கும் முற்பட்டது என்பதற்குப் புதைபொருள் ஆய்வாளர்கள் பல சான்றுகளை, உலகின் பல பாகங்களில் கண்டுள்ளனர்.

சிவ வழிபாட்டிற்கு இந்தியா பிறப்பிடமாக இருந்தபடியால், இங்கு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், இன்றும் அது நிலைத்துச் சிறப்புடன் விளங்குகின்றது.

சிவ வழிபாட்டிற்குரிய இலிங்க வடிவம் நாட்டின் எல்லாப் பகுதி களிலும் ஒரே சீராக இருப்பினும், அதன் அடிப்படைச் சமயதத்துவங்கள், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டனவாக இருக்கின்றன.

தமிழ்நாட்டில் சிவதத்துவம் **சைவசித்தாந்தம்** என்று விளங்குகின்றது. நால்வர் என்று சிறப்பிக்கப்பெறும் சைவசமய குரவர்கள் **சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்,** மற்றும் **காரைக்காலம்மையார், திருமூலர்** போன்ற ஞானிகளின் அருட்பாடல்களில் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களே சித்தாந்தத்திற்கு அடிப்படையானவை. இவ் அருளாளர்கள் கி.பி. 7 முதல் 9–ஆம் நூற்றாண்டு முடிய வாழ்ந்தவர்கள்.

அவ்அருட்பாடல்களில் புதைந்து கிடந்த தத்துவக் கருத்துக்களைத் தொகுத்தவர் கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **மெய்கண்டார்** எனும் அருளாளராவார். பொருள் பொதிந்த 12 பாடல்களில் தத்துவக்கருத்துகள் முழுவதையும் அமைத்தார். அந்நூலே **சிவஞானபோதமாகும்.** மெய்கண்டார் என்ற பெயரை அவருக்குத் 'தீட்சா நாமமாக' சூட்டியவர் அவருக்குக் குருவாகத் தோன்றி அருளிய சித்தர் பரஞ்சோதியாவார். அப்பெயர் அவர் அருளிய நூலுக்குப் பொருத்தமானதாக அமைந்தது சிறப்பாகும். மெய்கண்டாரின் மாணவர்களுள் ஞானி அருள்நந்தி சிவாசாரியாரும் மற்றவர்களும் எளிமையான பாடல்களில், குருநாதர் போதனைகளைத் தெளிவாக விளக்கிப்பல நூல்கள் ஆக்கியுள்ளனர்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில், வடமொழி – தென்மொழிப் பெரும்புலவரும், வேத ஆகமங்களைக் கசடறக் கற்றவருமான ஞானி **சிவஞானமுனிவர்,** சிவஞான போதத்திற்கு உரைநடையில் மிகவிரிவான விளக்க நூல் ஒன்று எழுதினார். **சிவஞானபாடியம்** அல்லது 'பாஷியம்'

என்று கூறப்படும் அந்நூல் அறிஞர்களின் பாராட்டைப் பெற்றது. சிவஞானபோத விளக்கத்திற்கு, இந்நூலே அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு முடிவான சான்று நூலாக இன்றும் விளங்கி வருகிறது.

அதனை ஆதாரமாகக் கொண்டே சைவசித்தாந்த அடிப்படைக் கருத்துக்கள் இங்கு கேள்வி – பதில் முறையில் கூறப்பட்டுள்ளன. சித்தாந்தக் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ளவும், மேற்கொண்டு அதனைத் தீவிரமாகப் பயிலத் தூண்டுவதற்கும், இது துணைபுரியும் என்று நம்புகிறோம்.

கேள்வியும் - பதிலும்

'படைப்புக்குக் காரணம் என்ன?' என்ற கேள்வி உலகம் தோன்றியது முதல் கேட்கப்படும் ஒரு கேள்வியாகும்.

பேரறிஞர்கள், தத்துவஞானிகள், சமயஞானிகள் அனேகர் இக்கேள்விக்கு விடைகூற முயன்றுள்ளனர்.

ஆனால் எந்த விடையும் முற்றிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என்பது பலர்துணிபு.

படைப்பிற்குக் காரணம், ஏதும் இல்லையோ? படைப்பு, படைத்தோன் பொழுது போக்கிற்காகச் செய்த ஒரு விளையாட்டோ!

படைப்பில் இரண்டு வகை உண்டு. ஆதியில் முதன் முதலாகப் படைத்தல் ஒன்று, மற்றொன்று ஒவ்வொரு ஊழிக்காலத்திற்கும் பின் படைத்தல்;

இந்து சமய எல்லாப்பிரிவினரும், ஊழிக்குப்பின் படைப்பிற்கான காரணத்தில் ஒரே கருத்துடையவர்கள். ஆன்மாக்கள் தம் கருமங்களை அனுபவித்துத் தீர்ப்பதற்குப் படைப்பு இன்றியமையாமையாகும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

ஆதிப் படைப்புக்குக் காரணம் என்ன என்பதில் மட்டும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

அக்கருத்துக்களைச் சற்றுச் சிந்திப்போம்.

பலர் கூறுவது நாம் காணும் இவ்வுலகம் ஒரு மாயையே என்பதாகும்; அதாவது அவை உண்மையான பொருளல்ல என்பது. ஒருபொருள் மாயை எனின், அவ்வாறு அதனை மாயை என்று அறிவதற்கு ஒருவர்

இருந்தேயாக வேண்டும். அவர் கடவுளாக இருக்க முடியாது. ஆன்மாவே அம்மாயப் பொருளைக் காண்கிறது என்றால், பல ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

ஆன்மாக்கள் எங்கிருந்து வந்தன?
அவைகளைப் படைத்தவர் யார்?
அவ்வாறு படைத்ததற்குக் காரணம் என்ன?

இக்கேள்விகளுக்குச் சில தத்துவஞானிகள் கூறும் விடை என்ன எனின், 'கடவுளும் ஆன்மாவும் வேறுவேறு அல்ல, இரண்டும் ஒன்றேயாகும்' என்பதாம். இவ்விளக்கத்தினால் மேலுமோர் ஐயம் தோன்றுகிறது. படைத்தோனுக்கே மாயை என்ற மயக்கம் தோன்றுமோ? அவன் அக்குறைபாடு உடையவனா?

அவ்வாறு இருக்க இயலாது. அவன் முற்றும் உணர்ந்தவன். எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிந்தவன்;

மேலும் ஒருபொருளைக்கண்டு அதனை வேறொன்றாக நினைத்து மயங்க வேண்டுமெனின், ஒருவன் அவ்வாறு பொருளை நன்கு அறிந்தவனாக இருத்தல் வேண்டும்.

ஒரு பாம்பின் உருவத்தைச் சிறிதும் அறியாதவன், இருளில் ஒரு கயிற்றைக் கண்டு பாம்பு என்று மயங்கி அஞ்ச இயலாது.

ஆகவே, மயங்கி மாறாகக் காணும் ஒரு பொருள் ஏற்கனவே உள்ள பொருளாக இருத்தல் வேண்டும். கடவுள் இவ்வாறு மயங்கக்கூடியவர் இல்லை. ஆன்மாக்களுக்குத்தான் இவ்வாறு மயக்கம் ஏற்படும். ஆதனால் கடவுளும் ஆன்மாக்களும் ஒரே பொருளாக இருத்தல் இயலாது.

எதற்காகக் கடவுள் ஆன்மாக்களையும் மயக்கந்தரும் பொருட்களையும் படைத்தார்?

தமிழ்நாட்டில் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த தத்துவஞானி மெய்கண்டார் எனும் அருளாளர் 'ஆன்மாக்கள் கடவுளால் படைக்கப் பட்டவை அல்ல' ஆன்மாக்கள் கடவுளைப் போன்றே ஆதியும் அந்தமு மின்றி என்றும் இருப்பவையாகும்' என்று உறுதியாகக் கூறுகின்றார்.

கடவுளைப் போன்றே ஆன்மாவும் என்றுமுள்ள பொருளாயின் இரண்டிற்கும் வேறுபாடு ஏதும் கிடையாதா?

உண்மையில் அவற்றுள் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அவ்வேறுபாடுகளுக்குக் காரணம் அவற்றின் எண்ணிக்கை, அறிவு, தூய்மை ஆகியவற்றைப் பொருத்தனவாகும்.

கடவுள் ஒருவரேயாகும்.
ஆன்மாக்கள் எண்ணற்றவையாகும்.

ஆன்மாக்கள் சிற்றறிவு உடையன. ஏதாவது பிறிது ஒன்றின் துணையில்லாது அவை எதனையும் அறியும் ஆற்றல் இல்லாதன.

கடவுள் தூய்மையானவர்.
ஆன்மாக்கள் தூய்மையில்லாதன.

இவ்வாறு வேறுபட்டிருக்கும் ஆன்மாக்களுக்கும் கடவுளுக்கும் எவ்வகையான தொடர்பு உள்ளது?

அத்தொடர்பைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் ஆன்மாக்களின் தன்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆன்மாக்கள் இயற்கையாக ஒரு குற்றமுடையன.

ஆணவம் என்னும் அறியாமையில் அவை அழுந்தி இருக்கின்றன.

ஆணவம், ஆன்மாவுடன் கலந்திருக்கும் ஒரு பொருளானபடியால், அதுவும் ஆன்மாவைப்போன்றே ஆதி அந்தம் இல்லாத, என்றுமுள பொருளாகும்.

ஆணவமலத்தின் சேர்க்கையால், ஆன்மா செயலற்று, அறிவு இழந்து, மயக்க நிலையில் உள்ளவனைப்போல் அசையாது கிடக்கும்.

ஆன்மாவின் இந்நிலையைக் **கேவல நிலை** என்பர்.

ஆணவத்தின் சக்தியும் ஒருவரையறைக்குட்பட்டதாகும்.

ஆன்மாவின் அறிவை ஆணவம் முற்றிலும் அழித்துவிடாது, ஆனால் அவ் அறிவைச் செயல்பட விடாது தடுக்கும் வல்லமையுடையது.

ஆணவம் என்றுமுள பொருளானதால் அதனை அடியோடு அழித்துவிட முடியாது. எனினும் ஆன்மாவின் அறிவாற்றலைக் கட்டுப்படுத்தும் ஆணவத்தின் சக்தியைக் குறைத்து விடலாம். உதாரணமாக இருளையும் விளக்கையும் கூறலாம். விளக்கின் ஒளி இருளின்

முழுமையைக் குறைக்குமே ஒழிய அதனை முற்றிலும் அழித்துவிடாது விளக்கு அணைந்தவுடன் இருள் வந்து சூழ்ந்துவிடும்.

ஆணவமாகிய அறியாமை இருளைப் போக்குவதற்கு எத்தகைய விளக்கு ஆன்மாக்களுக்குத் தேவை?

கடவுளையும் தன்னையும் பற்றிய உண்மைகளை உணர்வதன் மூலமே ஆன்மா அறிவு ஒளிபெறும்.

அவ்வுணர்வு தோன்ற, முதலில் அதனைப்பெற வேண்டுமென்ற விருப்பம் தோன்ற வேண்டும். அவ்விருப்பம் செயலைத் தூண்டும். செயலின் மூலம் இன்பதுன்ப அனுபவங்கள் தோன்றும். இவ்வனுபவங்கள் மூலமே மெய்யுணர்வு பெற இயலும்.

ஆன்மாவிற்கு முதலில் ஒரு விருப்பத்தை உண்டு பண்ணுவது எது?

மற்றொன்றின் துணை இன்றி, ஆன்மா எதனையும் உணர இயலாது.

ஆகவே அவ்வுணர்வு ஏற்படுவதற்கும் ஆன்மாவிற்கு ஒரு கருவி இன்றியமையாததாகும்.

எல்லையற்ற கருணையின் காரணமாக ஆன்மாக்களுக்கு இறைவன் அத்தகைய கருவிகளைக் கொடுத்து உதவுகிறான். அதன் மூலம் உணர்வு ஏற்படுகிறது.

அக்கருவிகள் மூலம் எவ்வாறு ஆணவ மலப்பிடிப்பை ஆன்மா நீக்க இயலும்?

ஆன்மாக்கள் தானாக எதனையும் செய்ய இயலாதனவாகும்.

சார்ந்த பொருள்களுடன் தன்னை இணைத்துக்கொள்வதே அதன் இயல்பான தன்மையாகும்.

ஓர் உடலில் ஆன்மா குடிகொண்ட பொழுது, தன்னை அவ்வுடலுடன் இணைத்துத் தானே அவ்வுடலாகக் கருதி, உடலுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களை அனுபவிக்கும். அதே ஆன்மா தன்னை இறைவனுடன் இணைத்துக் கொள்ளுமாயின் இறைவனுக்கு உரிய பேரின்பத்தை அனுபவிக்கும்.

இவ்வாறு பேரின்பத்தை அனுபவிக்க வேண்டுமாயின், ஆன்மா தன்னைத்தானே முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்ப துன்பங்களை ஒவ்வொரு ஆன்மாவும் தானே அனுபவித்து அவ் அறிவைப் பெறுதல் வேண்டும். இதற்காகவே இறைவன் ஆன்மாக்களுக்கு உடல், உலகம் முதலிய போகப் பொருள்களைக் கொடுத்தருளியுள்ளான்.

எல்லாம் வல்ல இறைவன் கருணையுடன் ஆன்மாக்களுக்கு மெய்யறிவை உடனடியாகக் கொடுத்திருக்கலாமே! ஏன் அவ்வாறு செய்யவில்லை?

ஆணவ மலத்தைத்தவிர மற்றொரு பாரம் ஆன்மாக்களை அழுத்திக் கொண்டிருக்கிறது. அதுதான் கன்மம் எனப்படும். அவரவர்கள் முன் செய்த வினைகளின் பயன் நல்லதாயினும் தீயதாயினும் ஒவ்வொரு செயலும் அதனைச் செய்த ஆன்மாவின்பால் கன்மமாகப் பதிகின்றன. அவற்றிற்கு உரிய பயன்களை ஆன்மா அனுபவித்தே நீக்க வேண்டுமென்பதே இயற்கையின் நியதியாகும்.

இதற்கு உடல் இன்றியமையாகின்றது.

ஆதியில் ஆன்மாவிற்கு உடல் இல்லை, ஆணவமலத்தால் அறிவற்றுக்கிடந்தது, என்பதை அறிவோம், அந்நிலையில் அது எவ்வாறு செயலாற்றி அதனால் ஏற்பட்ட கன்மப்பயனை அனுபவிக்க வேண்டி வரும்?

ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று நுண்நிலை, மற்றொன்று பருநிலை. இதனைச் சூக்குமம், தூலம் என்று வடமொழியில் கூறுவர். அதாவது முறையே கண்களுக்குப் புலப்படுபவை, புலப்படாதவைகளை குறிப்பனவாகும்.

ஒவ்வொரு பருப்பொருளும் அதன் நுண்நிலையில் இருந்து தோன்றியதேயாகும்.

எனவே கன்மமும் ஒரு நுண்நிலையிலிருந்தே தோன்றவேண்டும்.

ஒரு செயலைச் செய்யக்கூடிய 'ஆற்றலே' கன்மத்தின் நுண்நிலையாகும். உடலற்ற ஆன்மாவிற்கும் இவ்ஆற்றல் இயல்பாகவே விருப்பு வெறுப்புகளை உடையனவாகும். இவை, ஆன்மாவின் அறிவின் அளவையும் ஆணவத்தின் பலத்தையும் பொருத்ததாகும். அறிவும் ஆணவமும் ஆன்மாவிற்கு ஆன்மா வேறுபடுவனவாகும்.

இவ்விருப்பு வெறுப்புக்களே ஆன்மாவிற்கு மூலகன்மமாக அமைகின்றது. அம்முதல் கன்மமே ஆன்மாவின் முதல் பிறவிக்குக் காரணமாகும்.

ஓர் ஆன்மாவிற்கு இது எப்பொழுது நிகழ்ந்தது என்று கூறுவது மனித அறிவிற்கு அப்பாற்பட்டதாகும்.

உடலும் உலகமும் எங்கிருந்து வந்தன? இறைவனே அவையாக மாறிவிட்டானா? அல்லது அவனிடமிருந்து தோன்றியனவா?

நுண்பொருட்களும் பருப்பொருட்களும் மாயை என்னும் ஒரு பொருளில் இருந்து இறைவனால் தோற்றுவிக்கப்பெற்றவை. பொதுவாகப் பொய்த்தோற்றத்தைக் குறிப்பதற்கே மாயை என்ற சொல் உபயோகப் படுத்தப்படுகிறது. இம்மாயை அதைக் குறிப்பதல்ல.

இறைவனால் எந்தப் பொருளிலிருந்து உலகப் பொருட்கள் தோற்றுவிக்கப்படுகின்றனவோ அந்த மூலப் பொருளே இங்கு கூறும் மாயையாகும். மாயையிலிருந்து, இறைவன் தம் ஆற்றலினால் உலகைத் தோற்றுவிக்கின்றான்.

அவ் ஆற்றலே சக்தி என்று கூறப்படுவது. இறைவனும் சக்தியும் என்றும் பிரிவில்லாது இணைந்தே இருப்பர். இறைவனின் எண்ணத்திற்கு ஏற்ப சக்தி செயல்படும். சிவனை வழிபடுவோர் இறைவனை சிவம் என்று கூறுவர்.

இறைவன் மாயையிலிருந்தே உலகைத் தோற்றுவிப்பானாயின், அம்மாயை எங்கிருந்து வந்தது?

மாயை, ஆதியும் அந்தமுமில்லாத என்றுமுள்ள பொருள் என்று ஞானி மெய்கண்டார் உறுதியாகக் கூறுகின்றார். அது நுண்பொருளாக உலகம் அனைத்தையும் தன்னுள் நுண்நிலையில் அடக்கிக் கொண்டிருக்கும் ஒரு பொருளாகும்.

இறைவனின் எண்ணத்திற்கு இணங்கச் சக்தி மாயையிலிருந்து பருஉலகைத் தோற்றுவிக்கும்.

இவ்வாறு மெய்கண்டாரின் தத்துவம், **பதி-பசு-பாசம்** ஆகிய மூன்று பொருட்களை ஆதியந்தம் இல்லாத என்றுமுள்ள பொருட்கள் என்று கூறும்.

பதி என்றால் சிவனாகிய **இறைவன்.**

பசு – ஆன்மா என்னும் **உயிரைக்** குறிக்கும்.

பாசம் என்பது ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் **தளைகளைக்** குறிக்கும். தளைகள் மூன்றாகும் 1. அறிவைமயக்கும் ஆணவம் 2. நிலையற்ற உலகப்பொருள்களைக் கொடுக்கும் மாயை, 3. ஒரு வினையினால் ஏற்படும் கன்மப்பயன்.

இவ் ஆணவம், மாயை, கன்மம் மூன்றும் மலங்களெனப்படும். மலம் தூய்மையற்றது. ஆணவமலத்தின் பிடிப்பிலிருந்து ஆன்மா விடுதலை பெறுவதற்குத் துணையாக நிற்பது மாயை, கன்மம் ஆகிய மலங்கள்.

ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் எத்தகைய தொடர்பு உள்ளது?

ஆன்மா கடவுள் அல்ல என்பதை அறிந்தோம். அதுபோன்று உடல் ஆன்மா அல்ல. உடல் ஆன்மாவினால் இயக்கப்படுவதை நாம் தெளிவாகப் பார்க்கின்றோம். ஆன்மா உடலை இயக்கவில்லையாயின், உடல் பிணமாகக் கருதப்படும்.

எவ்வாறு உடலை ஆன்மா இயக்குகின்றதோ அதுபோல இறைவன் ஆன்மாவை இயக்குகின்றான். உடலுக்கு ஆன்மா போன்றது, ஆன்மாவுக்கு இறைவன். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உரிய இத்தகைய தொடர்பு மூன்று வகையானது.

1. ஒன்றாய், 2. வேறாய், 3. உடனாய் என்பனவே அம்மூன்றுவகைத் தொடர்புகளாகும்.

உயிருக்கு உயிராய் இறைவன் விளங்குவதால் ஒன்றாகும்.

இறைவன் வேறு ஆன்மா வேறு என்பதால் வேறாகும்.

உயிருக்கு உயிராய் இருப்பினும் ஆன்மாவின் செயல்களால் இறைவன் பாதிக்கப்படாமல், வெறும் சாட்சியாக மட்டும் உடன் இருப்பதால் உடனாகும்.

முன்செய்த வினைகளால் ஏற்பட்ட கன்மப்பயனை அனுபவித்தே தீர்க்கவேண்டுமென்பதால், ஆன்மாக்களுக்கு உடலை இறைவன் கொடுத்தான். அவ்வுடலைக் கொண்டு வினைக்கேற்ற இன்பதுன்பங்களை அனுபவிக்க உலகையும் தோற்றுவித்தான். எனவே கன்மமும் பிறப்பும் ஒன்றுக்கு ஒன்று காரணகாரியமாகும்.

கன்மமும் பிறப்பும் ஒன்றுக்கொன்று காரணகாரியமானால் பிறவிக்கு ஒரு முடிவு எவ்வாறு எப்பொழுது ஏற்படும்?

கன்மத்திற்கு மூன்று நிலைகள் உண்டு. அவை முறையே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்பனவாகும். சஞ்சிதம் என்பது **தொல்வினை,** அதாவது ஆன்மா செய்த வினைகளின் தொகையாகும். பிராரத்துவம் என்பது **ஊழ்வினை,** அதாவது இப்பொழுது எடுத்துள்ள பிறவியில் அனுபவிக்க வேண்டிய தொல்வினையின் ஒரு பகுதி. ஆகாமியம் என்பது **சேர்வினை** அதாவது ஊழ்வினையை அனுபவிக்கும் பொழுது தன்முனைப்பாகச் செய்யும் வினையின் பயன். இது தொல்வினையாகிய சஞ்சிதத்தில் சேர்ந்து பின் உரிய காலத்தில் ஊழ்வினையாகும்.

FATALISM என்பது தலையெழுத்துத் தத்துவம் அல்ல கன்மநெறித் தத்துவம். 'FATALISM' என்பது ஒருவர் வாழ்வு, வேறு ஏதோ ஒரு சக்தியின் விருப்பப்படியே அமையும், அதனை மாற்ற ஒருவராலும் இயலாது என்பதாகும். கன்மநெறித் தத்துவம் என்பது ஒருவன் வாழ்வு, அவன் முன்செய்த வினையைப் பொருத்தே அமையும். முயற்சித்தால் அதனை அவன் மாற்றவும் இயலும், அதன் மூலம் விரும்பிய பிறவியை அடுத்து எடுக்கவும் கூடும் என்பதாகும்.

இது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை சைவசித்தாந்தம் விளக்கமாகக் கூறுகிறது.

முன்கூறியபடி கன்மமும் பிறவியும் காரணகாரியமாக மாறிமாறி வந்து கொண்டிருப்பதின் பயனாக கன்மப்பயன் கூடியும் குறைந்தும் வருவது இயல்பு. கன்மப்பயன் முழுவதையும் எப்பொழுது ஆன்மா அனுபவித்துத் தீர்க்கின்றதோ அப்பொழுது அது சிவபெருமானின் மலர்ப்பாதங்களில் பேரின்ப நிலையடையும்.

ஒவ்வொரு மனிதனும் இந்நிலையை எளிதில் அடைவதற்கு ஏற்ற முறையை சித்தாந்தம் வகுத்துள்ளது. முன்கூறியபடி காணும் உலகத்திற்குக் கடவுள் நிமித்தகாரணம்; சக்தி, அதாவது கடவுளின் ஆற்றல், துணைக்காரணம்; மாயை முதற்காரணம் ஆகும்.

கடவுள் ஐந்தொழில்களை ஆற்றுபவராவர். அவை முறையே **படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல்** என்பனவாகும்.

படைத்தலும் காத்தலும் விளங்கக்கூடியனவே. மறைத்தல் என்பது என்ன? கடவுள் எதை யாரிடம் எதற்காக மறைக்கின்றார்?

கடவுள், ஆன்மாவிற்கு ஓர் உடலைக் கொடுத்ததன் முக்கிய காரணம், முன்வினைக்கு ஏற்ற இன்பதுன்பங்களை அனுபவித்துக் கன்மத்தைக்

கழிப்பதற்கேயாகும். இது நிறைவேற ஆன்மா உலக பந்தங்களில் ஈடுபடவேண்டியது இன்றியமையாமையாகும். அவ்வாறு ஈடுபடாது, ஆன்மா கடவுளை நோக்கி மனத்தைச் செலுத்துமாயின், அதன் கன்மம் கழிவதற்கு வாய்ப்பில்லை.

இந்நிலையைத் தடுப்பதற்குத்தான், கடவுள் தம் பெருங்கருணையின் காரணமாக தம்மை மறைத்துக் கொள்வதுடன், ஆன்மாவிற்கு உலகப்பொருள்களின் நிலையற்ற தன்மையையும் மறைக்கின்றார். ஆன்மாவின் கன்மம் முழுவதும் கழிந்தவுடன் கடவுளின் மறைப்புச் சக்தி அருட்சக்தியாக மாறி அருள்சுரக்கும்.

பிறப்பும் இறப்பும் தேவைதானா? கன்மம் முழுவதும் கழியும்வரை ஆன்மாவை ஒரே உடலில் வைத்திருக்கக் கடவுளால் இயலாதா?

கன்மவினையை அனுபவிப்பதற்காகவே, நைந்துபோன உடலை நீக்கி புதியதோர் உடலைக் கொடுப்பதற்கே மரணம் ஏற்பட்டதாகும்.

அவ்வாறாயின், உடலுக்கு உடல் வயது வேறுபாடு இருப்பதற்குக் காரணம் என்ன?

ஆன்மா அனுபவிக்க வேண்டிய கன்மத்தைப் பொருத்தே உடலும் அதன் வாழ்நாளும் அமையும். ஆன்மாவிற்கு உடல் ஒரு கருவியேயாகும். கருவி செய்யும் தொழிலுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும். ஒரு தையற்காரரும், ஒரு கொத்தனாரும் ஒரேவிதமான கருவியைக் கொண்டு தொழில் நடத்த இயலாது.

அதுபோன்று அனுபவிக்க வேண்டிய கன்மத்துக்குத் தக்கவாறே, ஆன்மாவின் கருவியாக உடல் அமைய வேண்டியது இன்றியமை யாததாகும்.

உடல் அமைப்பும் வயதும் மாறுபட்டு இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

ஆன்மாக்கள் முத்திநிலையை அடைவதற்குச் சைவ சித்தாந்தம் தெளிவான நான்கு வழிகளைக் கூறுகின்றது. அவை முறையே **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்பனவாகும். சரியை உடல் உழைப்பை அதிகமாகவும் சிறிதுமன உழைப்பும் கொண்டது. கிரியை உடல் உழைப்பினும் மன உழைப்பை அதிகமாகக் கொண்டது. யோகம், மனதை ஒருநிலைப்படுத்துதல். ஞானம், மெய்ப்பொருளைத் தெளிவாக உணர்த்தல், இந்நான்கில் ஞானம் ஒன்றே ஆன்மாவிற்குப் பேரின்ப நிலையைக்

கொடுப்பதாகும். மற்றைய மூன்றும் ஞானத்தை அடைவதற்கு ஏற்ற மூன்று படிகளாகும்.

சரியை என்றால் என்ன?

திருக்கோயில்களைத் துலக்குதல், அங்கு விளக்கு ஏற்றல், பூமாலைகள் புனைதல் முதலிய பணிகள் மட்டும் சரியை என்று கருதுதல் கூடாது. எல்லா உயிரினங்களுக்கும், குறிப்பாக மனித இனத்திற்கு தொண்டு செய்வதும் சரியையில் அடங்கும். ஒவ்வொரு ஆன்மாவிலும் கடவுள் குடிகொண்டுள்ளான் என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும் உடல் இறைவன் கோயிலேயாகும்.

மக்கள் இதை உணர்ந்தார்களேயானால், எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஒருவருக்கு இன்னா செய்யத்துணியார்கள்.

அப்பொழுது எல்லாத் துன்பங்களுக்கும் இருப்பிடமாக விளங்கும் இம்மண்ணுலகமே விண்ணுலகமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

கிரியை என்றால் என்ன?

இறைவன் அருளிய ஆகம விதிகளுக்கு இணங்கத் திருக்கோயில் களில் பூசை நடத்துவதே கிரியையாகும். பூசை செய்வோர், மனத்தாலும், வாயாலும், உடலாலும், பணிபுரிதல் வேண்டும். நன்கு பயிற்சிபெற்ற பூசாரிகளை சிவன் கோவில்களில் ஆதிசைவர்கள் என்று வழங்குவர்.

பூசையினால், அதன் பயனை அடைபவர்கள் பூசாரிகளா அல்லது பக்தர்களா?

பூசையில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இறைவனுக்கு நம் நன்றியை அன்புடன் வெளிப்படுத்துவதாக அமைந்தனவேயாகும். பலவித தீப ஆராதனைகள், ஆன்மாக்கள் படிப்படியாக முன்னேறி, முடிவில் இறைவனுடன் கலத்தலை எடுத்து விளக்குவனவாகும். கிரியை, திருக்கோவில்களுக்கு மட்டும் உரியதல்ல. ஒவ்வொருவரும் அவரவர்கள் இல்லத்திலும் திருவுருவம் ஒன்றிற்கு அவ்வாறு வழிபடவேண்டும். அதனால் திருக்கோவில் பூசை ஒரு செய்முறை விளக்கமாகவும் பக்தர்களுக்கு அமையும். திருக்கோவில்களில் நாள்தோறும் வழக்கமாக ஆறுமுறை பூசைகள் நடைபெறும். அவை பொதுவான உலக நன்மைக் காகவே நடைபெறுவதாகும். தனிப்பட்டோர் தங்கள் வேண்டுகோள்களை வீட்டில் நடைபெறும் பூசையில் மனம் கசிந்து வேண்டிக் கொள்வதே முறையாகும், பயனுடையதாகும். இவ்வாறு வீட்டில் பூசை செய்யக் கூடிய சூழ்நிலையும் வாய்ப்பும் இல்லாதவர்கள், தன் உள்ளத்திலேயே திருவுருவை

அமைத்து பூசைக்குரிய எல்லா நிகழ்ச்சிகளையும் மானசீகமாகவே பக்தியுடன் செய்யலாம். இதன் மூலமும் வெளிப்படையாகச் செய்யும் பூசையின் முழுப்பயனையும் அடையலாம்.

எண்ணுதற்கும் அரிதாய், அப்பாலுக்கப்பாலாய் உள்ள பரம்பொருளை, மனிதன் ஆக்கிய ஒரு சிறிய சிலை உருவினில் உள்ளான் என கொள்வது சரியோ?

இறைவனின் தோற்றம் மூன்று வகைகளில் உருவகப்படுத்த இயலும்.

1. உருவம் 2. அருவுருவம் 3. அருவம். உலகச் சமயங்கள் அனைத்தும் மேற்கூறிய மூன்றில் ஏதேனும் ஒருவகையில் இறைவனை உருவகப்படுத்தி வழிபடுவனவாகும்.

சைவ சித்தாந்தம் ஒன்றே இறைவனை உருவம், அருவுருவம், அருவம் ஆகிய மூன்று வகையிலும் உருவகப்படுத்தி வழிபடுதலைக் கொண்டது. இதன் மூலம் சைவசித்தாந்தத்தின் பரந்த நோக்கம் வெளிப்படுவதை உணரலாம்.

இறைவன்பால் மனம் ஒன்றுதற்கு இயல்பாக அமைந்தனவே இம்மூன்று நெறிகளும். ஒரு உருவத்தின்பால் மனத்தைச் செலுத்துவது எளிது. அடுத்தபடியாக சிவலிங்கம் போன்ற அருவுருவில் மனத்தைச் செலுத்துவது எளிதாகும். இறுதியாக இப்பயிற்சிகள் மூலம் அருவமாக இறைவனை மனங்கொள்தல் எளிதாகும். அந்நிலையில் வெளிக்கு வெளி யாய் விளங்கும் இறைவனின் எல்லையற்ற இயக்கத்தை உணர இயலும்.

திருக்கோவில் வழிபாட்டின் மூலம் ஒருவன் எவ்வாறு பயன் அடையக்கூடும் என்பதை, மேலை நாட்டு அறிஞர் ஆக்டஸ் அ∴ஸிலி (Acdous Huxley) கூறுவதை இங்கு நினைவில் கொள்வது பொருத்தமாகும். 'என்றுமுள்ள தத்துவம்' (Perennial Philosophy) என்ற நூலில் அவர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

"நம்பிக்கையுடனும் பக்தியுடனும் இடைவிடாது செய்யும் கிரியாபூசைகளினால் பூசைக்குரிய வடிவத்தில் ஒருநிலையான சக்திதோன்றி அதில் மனம் அழுந்தும்.

"தீவிரமான நம்பிக்கையும் பக்தியும் இருப்பின் வழிபடும் உருவம் உயிருள்ளதாகத் தோன்றும். இந்த நம்பிக்கையும் பக்தியும் இருக்கும்வரை வழிபடுவோர்க்கு அவ்வுருவம், உயிருள்ளதாகத் தோன்றுவதோடு அன்றி, மக்கள் விருப்பங்களையும் நிறைவேற்றிவைக்கும் ஆற்றலும் பெற்றிருக்கும்".

யோகம் என்றால் என்ன?

யோகம் என்பது மனவலிமையால் உடல் உறுப்புக்களையும் சுவாசத்தையும் கட்டுப்படுத்துவதாகும். இதன் மூலம் ஒருவர் தான் நினைத்தபொருளின் மேல் மனத்தை நிறுத்தித் தியானிக்க இயலும். உடல் வலிமைக்காகவும் நினைவாற்றலுக்காகவும் மேற்கொள்ளும் யோகப் பயிற்சிக்கும் இதற்கும் வேறுபாடு உண்டு.

சைவசித்தாந்தம் கூறும் யோகம், இறைவன் அருளைப் பெறுவதற்கு ஒருவனைத் தகுதியுடையவனாக ஆக்குவதாகும். அவ்வாறு தகுதிபெற்ற ஒருவனுக்குச் சிவபெருமான் ஞானத்தை அருள்வார். ஞானம் பெற்ற ஒருவர் மெய்யுணர்வு பெறுவார்; தம்மைச் சுற்றியுள்ள நிலையற்ற பொருட்களைக் கொண்டு வருத்தமுற்றுத் தூக்கத்தையும் இழப்பார்; எப்பொருள்களிலும் பற்றிலாதவராக இருப்பார்; இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வேறுபாடு காணார்; அவரிடம் ' நான் – எனது' என்னும் அகங்கார மகங்காரங்கள் இருக்கா.

அந்நிலை அடைந்தோர்களைச் சீவன்முத்தர் என்பர். அதாவது, இந்த உடம்பிலேயே முத்தி அனுபவத்தைப் பெறுபவர்கள் என்று பொருள். சீவன் முத்தர்கள் ஆற்றும் கன்மங்கள் நன்மையாயினும் தீமையாயினும் அவை இறைவன் செயலாகவே அமையும். அதனால் சீவன் முத்தர்களுக்கு அவர்கள் செயல்களால் ஆகாமியமாகிய சேர்வினை ஏற்படுவதில்லை.

அவர்கள் இப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய பிராரத்துவ வினையை அவர்கள் அனுபவித்தே தீர்த்துவிடுவர். அதற்குரிய இன்ப துன்பங்களைச் சீவமுத்த நிலைக்கு முன்னரும் பின்னரும் அனுபவிப்பர். அதனால் பிராரத்துவம் முற்றும் தீர்ந்துவிடும்.

சஞ்சிதமாகிய வினைத்தொகை, ஒருவன் மேற்கூறிய முறைகளில் பக்தியுடன் பயின்று இறைவன் கருணையினால் சிவஞானம் பெற்ற விநாடியே நீங்கும். இவ்வாறு ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம் ஆகிய வினைகள் நீங்கியவுடன் ஆன்மா தூய்மையுடையதாகவிளங்கும். தூய்மை பெற்ற ஆன்மாக்கள் இறைவனின் கருணைக் கடலில் மூழ்கிப் பேரின்ப நிலையைப் பெறும். அவற்றிற்கு மேற்கொண்டு பிறப்பு இறப்பு கிடையா.

ஞான நிலை அடையும் தருவாயினும் உலகச் சூழ்நிலையால் மீண்டும் தடுமாறாது இருப்பதற்குச் சில நெறிகள் கூறப்பட்டுள்ளன.

1. மகாமந்திரமாகிய **'சிவாயநம'** எனும் ஐந்தெழுத்தை ஓயாது மனத்திலோ வாய்விட்டோ உச்சரித்துக்கொண்டே இருத்தல் வேண்டும்.

2. திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுதல் வேண்டும்.

3. சிவனடியார் உறவினை எப்பொழுதும் நாடுதல் வேண்டும்.

கீழ்வருவன மனத்திற்கொள்ள வேண்டிய சைவசித்தாந்தத்தின் சில முக்கிய கொள்கைகளாகும்.

1. ஒன்றே குலம் ஒருவனே தேவன்;

2. எல்லாச் சமயங்களும் அதன் வேதநூல்களும் ஒரே இறைவனால் தோற்றுவிக்கப் பெற்றதேயாகும்.

3. எந்த உருவத்தை, எப்பெயராலும், எவ்விடத்திலும், எம்முறையில் யார் வழிபட்டாலும் அவ்வுருவத்தில் சிவபெருமானே இருந்து அருள்புரிவார்.

4. நாட்டில் சாதிவேறுபாடு இருப்பினும் ஒருவன் சிவனடியாராயின், சாதியைக் கருதாது மரியாதையுடனும் சமமாகவும் அவனைக் கருதுதல் வேண்டும். சிவன் கோவில்களில் அறுபத்திமூன்று நாயன்மார் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமே இதற்குச் சான்றாகும். (நாயன்மார்கள் அந்தணர்குலத்திலிருந்து, தீண்டப்படாதவர் வரையுள்ள எல்லாக் குலங்களையும் சேர்ந்தவர்கள். அவர்கள் படிவங்கள் அனைத்தும் ஒரே மேடையில் வரிசையாக அமைக்கப்பட்டு நாள்தோறும் தமிழ்நாட்டுச் சிவன் கோவில்களில் வழிபடப்படுகின்றன).

5. சைவசித்தாந்தம் அன்பு என்னும் அடித்தளத்தில் தோன்றியதாகும்.

சிவமே அன்பு; அன்பே சிவம்.

வான்முகில் வழாது பெய்க; மலிவளஞ்சுரக்க;
மன்னன் கோன்முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான் மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க;
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

நீத்தார் பெருமை

நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

- திருவள்ளுவர்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுஉற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

- மாணிக்கவாசகர்

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
எந்தாய் இகலவேந்தரேறே இறந்தனையே
அந்தோ இனிவாய்மைக்காருளரே மற்றென்றான்

- கம்பர்

நினைந்து நினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

- வள்ளலார்